| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **19/06/2024** | முதல் | **23/06/2024** |
| | அறிக்கை எண் : | **049/ 2024** | வெளியீட்டு நாள் : | | **18/06/2024** | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (13.06.2024 முதல் 17.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –23-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/06 | 14/06 | 15/06 | 16/06 | 17/06 | தேதி | நாள்-1 19/06 | நாள்-2 20/06 | நாள்-3 21/06 | நாள்-4 22/06 | நாள்-5 23/06 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.2 | 3.2 | மழை (மி.மீ) | 5 | 1 | 0 | 1 | 1 |
| 39 | 38 | 38 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 38 | 37 | 37 | 36 |
| 26 | 26 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 23 | 23 | 22 |
| 5 | 5 | 5 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 7 | 8 | 8 |
| 69 | 65 | 64 | 58 | 65 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 80 |
| 46 | 49 | 39 | 58 | 51 | | 50 | 40 | 40 | 50 | 70 |
| 6 | 8 | 9 | 18 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 16 | 12 | 14 | 18 | 16 |
| வட மேற்கு | தென் கிழக்கு | வட மேற்கு | வட கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 19 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 18 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (21 - 27 ஜூன் 2024):**

### மழைப்பொழிவு :

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 18 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**விவசாயம் :**

இந்த பட்டத்தில் காய்கறி சாகுபடி செய்ய திட்டமிடும் விவசாயிகள் விதைப்பதற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் தலா 1 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் கலந்து நிலப்பரப்பில் இடவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வெண்டை, தக்காளி, கால்நடை**

**வெண்டை:**

வெண்டை பயிரில் தண்டு மற்றும் காய்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலால் வெண்டைச் செடியின் இளங்குருத்து வாடித் தொங்கும். மொக்கு மற்றும் பூக்கள் உதிர்ந்து விடும். காய்கள் உருகுலைந்து காணப்படும்.

முதலில் தாக்கப்பட்ட குருத்து, மொட்டு, பூக்கள் மற்றும் காய்களை சேகரித்து அழிக்க வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

மேலும் 10 லிட்டர் தண்ணீருக்கு 500மில்லி வேப்பங்கொட்டைக் கரைசல் அல்லது 5 மில்லி ஆசாடிராக்டின் இவற்றில் ஏதேனும் ஒன்றினை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**தக்காளி:**

தக்காளி நாற்றாங்கால் அமைக்க ஜுன் மாதம் நல்ல தருணம்.

விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 5-10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.

**கால்நடை:**

உள்ளது. இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாகவும் உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது. இதுவும் ஓர் மழைக்கால நோயாகும். நல்ல ஆரோக்கியமான திடமான இளம் மாடுகளை 6 மாத வயது முதல் 3 ஆண்டு வயது வரை அதிகம் பாதிக்கிறது.

தொடை அல்லது முன்கால் சப்பை அல்லது கழுத்து போன்ற சதைப்பிடிப்புள்ள பகுதிகளில் வெப்பம் மிகுதியாகவும் வலியோடு கடினமான தன்மையுள்ள பெருத்த வீக்கமும் காணப்படும் தோலின் நிறம் கருப்பாக இருக்கும். இதன் காரணமாக மாடுகள் நடக்க முடியாமல் நொண்டும்.

நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் மாட்டைப் தனியாக பிரித்துத் ஒதுக்குப்புறமாக வைத்துக் கண்காணிக்க வேண்டும்.

நோய்க் கண்ட 24 மணி நேரத்திற்க்குள் உடனடியாக கால்நடை மருத்துவரின் உதவியுடன் மருத்துவம் செய்ய வேண்டும் இல்லையேல் மாடுகள் இறந்து விடும். ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே மாடுகளுக்குத் தடுப்பூசி போடுதல் அவசியம்.